# பெரியாரின் கட்டுரைகள்

## I. சமுதாயம்

### 1. பிறப்புரிமையும் தடைகளும்

உலகில் உள்ள உயிர்வர்க்கங்களில் மனிதப் பிறப்பே மிகத் தாழ்ந்த பிறப்பு என்பதும், மனிதனைப் போல் அடிமை உலகில் வேறு உயிர்கள் இல்லை என்பதே பெரியாரின் கொள்கை.

மனிதன், மனுடன், மானிடன் என்ற பதங்களே மானத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட மொழிகள் ஆதலின் மனிதன் என்பவன் மானமுடையோன். எனவே மனிதனுக்கு மனிதத் தன்மை காட்டும் உரிமையுடையது. மானம் மட்டும் தான் - மனிதனுக்கு அவனுடைய உண்மையான மானிடத் தன்மையை அறிவதற்கு அவனுடைய பிறப்புரிமையும் தன்மானமும் தான்.

நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன்னம்பிக்கை அற்ற தன்மையும், எவ்வாறு கிடைத்தாலும் போதும் என்கிற ஆசை அடிமைத் தன்மையும் மனிதனின் பிறப்புரிமை அல்ல.

மதம் குறித்து பெரியார் கூறும் கருத்துகள்

இந்து மதம் என்னும் வார்த்தைக்குப் பொருள் காண இயலவில்லை என்றும், இந்து நதிக்கரையி

இருந்ததால் சிந்து என்பது இந்து என்பதாக மாறி, அது ஒரு கூட்டத்தினருக்குப் பெயராகிப் பிறகு மதமாகிவிட்டதாகவும், கூறப்படுகிறது.

'மதம்' என்று சொல்லக் கூடியவை ஒவ்வொன்றுக்கும் மதகர்த்தா இன்னார், அவரது கொள்கை - கட்டளை இன்னது, இன்ன காலத்தில் ஏற்பட்டது என்கிற உண்மைகள் உண்டு.

மதத்தின் பெயரால் அநியாயம்!

நமது மதச் சடங்குச் செலவைப் பாருங்கள். நம்மிடம் வசூலிக்கும் வரியை நமக்காகச் செலவு செய்வதில்லை என்றும், நமது சுயமரியாதைக்கு ஈனம் என்றும் கூறி சர்க்காருடன் சண்டை செய்கிற கர்ப்பம் தரித்தது முதல் சாகும்வரை வரி விதித்து 100க்கு 100 பேரிடம் - பணக்காரன், ஏழை என்ற பாகுபாடே இல்லாமல், கொள்ளைப்போர் கூட்டத்தினர்க்கும் கொள்ளை நினைக்கும் தருணத்தில், வரி கறந்து விடுகிறார்கள்.

சுயமரியாதை கண்டுபிடித்த உண்மையான சுயராஜ்ஜியம் என்பது துலங்கும்.

## 2. அறிவுள்ள மனிதனுக்கு அடையாளம்

உலகத்தில் மதங்கள் ஏற்பட்டுப் பல ஆயிரக்கணக்கான வருடங்கள் ஆகியிருந்தாலும் மதங்களை ஏற்படுத்தினவர்கள் எல்லாம், அல்லது மூல புருஷர்கள் எல்லாம் தெய்வீக சக்தி பொருந்தியவர்களாகவும், தெய்வ சம்பந்தமுடையவர்களாகவும் இருந்தனர்.

இந்தியாவில் மதமாற்ற பிரச்சாரங்களின் செயல்பாடுகள்:

மதம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. பகுத்தறிவு வேறு. மதக் கோட்பாடுகள் வேறு என்றும், இந்தக் காலம் வேறு அந்தக் காலம் வேறு என்றும் பெரியவர்கள் நியமனங்களுக்குக் காரண காரியங்களைத் தேடுதல் முறையல்ல.

இந்திய மக்களின் கல்வியறிவு வாசனை அற்ற தன்மையும், பாமரத் தன்மையும், அடிமைத் தன்மையும் எல்லாம் சேர்ந்து உலகத்தில் வேறு எந்தத் தேசத்திலும் இல்லாத அளவிற்குத் தாண்டவமாடுகின்றன.

## 3. சாதி

சாதி என்பது இந்துக்கள் என்பவர்களுக்குள் - ஆரியக் கொள்கைகளுக்கு அடிமைப்படுபவர்களுக்குள் மட்டும் தான் கடவுளால் திணிக்கப்பட்டது. என்கின்ற கொள்கையின் மீது நான்கு சாதிகளாக அதுவும் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. சாதியைக் கட்டிக்கொண்டு அழுவது இவ்விழிவுகளை மறைமுகமாய் ஏற்றுக் கொள்வதையே குறிப்பாகும்.

நமது சாதி, நமது மதம் என்று அவற்றைக் காப்பாற்றும் கவலைக் கொண்டு ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு என்று மதத்தையும் சாதியையும் சொல்லி அவற்றை நிலைநிறுத்திக் கொண்டே போனால், பின்னால் நம் நிலை அற்ற சிந்தனைக் குறைதாகி விடும்.

'பஞ்சம சாதிகள்' என்பது இப்போது நமது நாட்டில் பெரும்பான்மையாய் இருக்கும். பல முக்கியமான சாதிக்காரர்கள் என்பவர்கள் பொதுவும் இந்த பெயரால் குறிப்பிடப்படுகிறது. சாதி என்பது அவரவர் செய்யும் வேலையின் அடிப்படையில் பிரித்துக்காட்டப்படுகிறது. உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் முதலிய வர்க்க போராட்டம் தான் உருவாகியது. மக்கள் சமத்துவம் உண்டாக -வில்லை.

# 4. சாதிகள் நடைமுறை

ஆதியில் உண்டான நான்கு சாதிகள் நான்காயிரம் சாதிகளாகப் பிரிந்ததற்குக் காரணம் ஒரு சாதியும் இன்னொரு சாதியும் கலந்ததினால் மட்டுமே. ஒவ்வொரு சாதியினரும் தங்கள் தங்கள் சாதிகளைப் பற்றி எவ்வளவு மேன்மை ஆதாரங்களைக் கற்பித்துக் கொண்டாலும், கண்டுபிடித்தாலும் எந்த ஆதாரத்திலும், பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர் (உயர்ந்தோர்) மற்றவர்கள் எல்லாம் கீழ்பட்டவர்கள் தான் என்பதை நிலை நிறுத்துவதற்கு மட்டுமே அவ்வாதாரங்கள் பயன்படுகின்றன தவிர பகுத்தறிவு உடையவர்கள் ~~சா~~சாதியைக் கூறுவதில்லை.

பழைய ஆட்சிகள் எதுவும் தீண்டாமையை ஒழிக்க முடியவே இல்லை. எல்லா சாதி சமூகமும் முன்னேற்றம் அடைந்து எல்லோரும் ஒன்று போல் பாவிக்கப்படவும், மற்ற வகுப்பாரின் அரசியலில் கிளர்ச்சி அடையாது எல்லோரும் சம பதவி அடைந்து மேல் நிலைக்கு உயர வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்று என்ற மனப் பக்குவம் அடைதல் அவசியம்.

---